நிலா காமிக்ஸ்

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்



3


கல்கியின்


# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்


நிலா
காமிக்ஸ்


www.nilacomics.com


வணக்கம் வாசகர்களே...
நாம் என்னவோ நினைத்தோம் வந்தியத்தேவனை.
ஆதித்த கரிகாலர் தேர்வு செய்து அவனிடம் ஓலை
கொடுத்தனுப்பியது சரிதானா என்று? அவன் இந்த வேலைக்கு
மிகச் சரியானவன் என்பதை நிருபித்துவிட்டான் அல்லவா!
கடம்பூர் கோட்டைக்குள் நுழைய அவன் செய்த யுக்தி, தஞ்சை
கோட்டையை விட்டு தப்பி பழையாறை கோட்டைக்குள் அவன்
நுழைய, கம்ச வேடம் பூண்டது, எல்லாமே சரிதான். ஆனால்,
இந்த ஆழ்வார்க்கடியானின் கண்ணில் அகப்பட்டுவிட்டான்
பாருங்கள், அதுதான் சற்று சிந்திக்க வேண்டியுள்ளது. ஒரு
வேளை அவன், பழுவேட்டரையரின் ஆட்களிடம் சிக்க
வைத்துவிட்டால், பாதாள சிறைதான் வந்தியத்தேவனுக்கு.
என்ன நடக்கிறது என்று பார்க்கலாம் வாருங்கள்.



செம்பியன் மாதேவியின் அரண்மனை
சபா மண்டபத்தில் நவரத்தினங்கள் இழைத்த சிம்மாசனத்தில் செம்பியன் மாதேவி வீற்றிருக்க, அவரை சந்திப்பதற்காக பல தேசங்களிலிருந்து சிற்பிகளும், ஓவியர்களும், சிவனடியார்களும் கூடவே ஆழ்வார்க்கடியானும் அவனுடைய அண்ணன் ஈசான சிவபட்டரும் வந்திருக்கிறார்கள்.
ஸ்தபதிகளே! அதை அருகில் கொண்டு வாருங்கள்.



ஒருவர், தான் புதிய முறையில் வடிவமைத்த கற்றளியை, பொம்மை வடிவில் செய்து கொண்டு வந்து தேவியிடம் காட்டுகிறார்.
தாயே! இந்த முறையில் கட்டுமானத்தை அமைத்தால், அத்திருத்தலங்கள் பல ஆண்டுகள் நிலைத்து நின்று தங்களது பெயரை சொல்லிக்கொண்டே இருக்கும்.



பட்டரே! இந்த ஆலயத்தின் கட்டமைப்புகள் எவ்வளவு சிறப்பாயிருக்கிறது பார்த்தீர்களா? தமிழகத்திலுள்ள அனைத்து முக்கிய ஸ்தலங்களிலும் இம்மாதிரி கட்டமைப்புகளாலான ஸ்தலங்களை அமைக்க வேண்டும் என்ற ஆவல் என் உள்ளத்திலும் பொங்குகிறது...
என்று கூறி தேவியின் முகம் சட்டென்று வாடியது.
ம்...
தாயே! தங்களின் விருப்பம் நிறைவேறுவதில் தடை என்ன? தேவார பதிகம் பாடல்பெற்ற ஸ்தலங்களில் எல்லாம் இம்மாதிரி கற்றளிகள் எழுப்பினால், அந்த அமைப்பை பார்த்தவுடன் இது "தேவார பதிகம் பாடல்பெற்ற ஸ்தலம்" என்பதை ஜனங்கள் உணர்ந்து கொள்வார்கள்.



தாங்கள் கூறுவதும் சரியான யோசனைதான்.
இவ்வாறெல்லாம் கோயில்களுக்கு பணியாற்று வதுதான் என் மனோரதமும் கூட, என் *நாயகர் மட்டும் இறையடி சேராமல் இன்னும் சிலகாலம் ஜீவித்திருந்தால் என் மனோரதங்களும் நிறைவேறி இருக்கும்! (என்று பெருமூச்சு விடுகிறார்)
* கணவர்
இப்போது மட்டும் என்ன குறைவு தாயே! நீங்கள் நினைத்ததை நினைத்தபடி நிறை வேற்ற இளவரசர்கள் இருவரும் சித்தமா யிருக்கிறார்கள், அப்படியிருக்கும்போது...
இருந்தாலும் என் மனதில் இப்போது அவ்வளவு உற்சாகமில்லை. ஏதேதோ கேள்விப்படுகிறேன். நான் செய்யும் கோயில் திருப்பணிகளால் அரசாங்கப் பணமெல்லாம் காலியாகிவிடுகின்றது என்று சிலர் குறை கூறுகின்றனராம்...



சிவனுக்கு இவ்வளவு ஆலயங்கள் எதற்கு என்று கேட்கிறார்களாம்.... மற்றவர்கள் கேட்பதை பற்றியும் எனக்கு கவலையில்லை, ஆனால் காஞ்சியில் இருக்கும் இளவரசர் கூட....
உடனே ஆழ்வார்க்கடியான் முன் வந்து.....
தாயே!!
அவ்வாறு கேட்பவர்களில் அடியேனும் ஒருவன்!
இந்த வைஷ்ணவன் காரணம் இல்லாமல் இவ்வாறு நம்மிடம் பேசமாட்டான். என்ன சொல்கிறான் என்று பார்ப்போம்...
என் வயிறு பற்றி எரிகிறது!
ஆழ்வார்க்கடியான் கூறியதை கேட்டு சபையிலிருந்த மற்றவர்களும் அதிர்ச்சியுற்றனர்.
திருமலைக்கு மூளை ஏதாவது குழம்பிவிட்டதா!?
இது என்ன விபரீதம்!


இம்மாதிரி அநியாயம் இந்த உலகில் வேறு உண்டோ?
மகாராணி!
என் சகோதரன் இப்படித்தான் ஏதாவது உளறுவான். திடீரென்று அவனுக்கு வெறி வந்துவிடும்.
திருமலை! சற்று அமைதியாக பேசு! இப்போது என்ன உனக்கு அநியாயம் நடந்து விட்டது?
அம்மா! இன்னும் என்ன அநியாயம் நடக்க வேண்டும். பேயாண்டியும், கையில் கபாலம் ஏந்திப் பிச்சையெடுத்து பிழைப்பவனுமாகிய சிவனுக்கு எத்தனை மாடக் கோயில்கள்? எத்தனை கற்றளிகள்?


இந்த உலகையெல்லாம் காக்கும் மஹா விஷ்ணுவுக்கு ஒரு திருக் -கோவில் கூட கிடையாதா?
தாயே!
இந்த உலகம் உய்ய ஆனந்த நடனமாடும் பெருமானுக்குதான் மாடக் கோயில்கள் வேண்டும்!
ஓயாமல் தூங்குகிற திருமாலுக்கு ஒரு சிறிய இடம் போதாதா?
அண்ணா!
ஓயாமல் தூங்கும் பெருமாள்தான் உலகளந்த பெருமாள்!
மகாபலியை பாதாளத்தில் அழுத்திய பெருமாள்!
அப்படிப்பட்ட உலகளந்த பெருமாள், எங்கள் சிவ பெருமான் திருப்பாதத்தை தரிசிக்க பாதாளம் வரையில் சென்றும் பயனளிக்கவில்லையே!



உங்கள் சிவன் அவ்வளவு பெரியவராய் இருந்தால் அவருக்கு கோயில் எதற்கு? அவர் கோயிலுக்குள் வரும்போது கோயில் அவரின் தலையிலே இடித்து, இடிந்து விழுந்துவிடுமே! (என்று நய்யாண்டி செய்கிறான்)



செம்பியன் மாதேவி ஆழ்வார்க்கடியான் கூறியதைக் கேட்டு சிரித்துக் கொண்டே,
உங்கள் சண்டையை நிறுத்துங்கள்!
திருமலை! நீ எந்த ஊர் விண்ணகரத்தை புதுப்பிக்க வேண்டும் என்கிறாய்?


அம்மா! தங்களுடைய மாமனார், பராந்தக சக்கரவர்த்தி
-யின் பட்டப் பெயரைக்கொண்டு அமைக்கப்பட்ட ஏரியை
காத்தருளும் வீரநாராயணப் பெருமாளின் கோயில்
சுவர்கள் இடிந்து விழுந்து வருகின்றன.



கோயில் இடிந்தால், ஏரிக்கரையும்
இடிந்து, பல நூறு ஊர்களும்
பாழாகிவிடும். அந்த கோயிலுக்கு
தான் திருப்பணி செய்ய வேண்டும்.



ஆழ்வார்க்கடியான் தன்னிடத்தில் தனிமையில் முக்கிய விஷயம் ஏதோ கூற விரும்புகிறான் என்பதை உணர்ந்த செம்பியன் மாதேவி....
ஆகட்டும் செய்வோம்! அதை பற்றி விவரமாக என்னிடம் சொல்லு. இவர்கள் எல்லோ -ரும் இப்போது போகட்டும்.
என்று செம்பியன் மாதேவி கூறியதும், அந்த குறிப்பை உணர்ந்து ஈசான சிவபட்டர் உள்பட அனைவரும் வெளியேறிச் செல்கின்றனர்.
சபையைவிட்டு அனைவரும் சென்ற பிறகு, செம்பியன் மாதேவி தன் குரலை தாழ்த்திக் கொண்டு,
திருமலை! நீ ஏதோ முக்கியமான விஷயம் கொண்டுவந்து இருக்கிறாய் என்று எண்ணுகிறேன். அதனால்தான் அப்படி குறுக்கிட்டு பேசினாய் அல்லவா?



ஆம் தாயே! முக்கியமான செய்திகள் பலவற்றை கொண்டு வந்திருக்கிறேன். ஆனால், காஞ்சியில் உள்ள இளவரசரைப் பற்றி தாங்கள் ஏதோ சொல்ல தொடங்கினீர்கள், அதை தடுப்பதற்காகவே நான் அவ்வாறு பேசினேன்.
சற்றுமுன் இங்கே இருந்தவர்களில் உண்மையானவர் யார்? ஒற்றர் யார்? என்று யாருக்கு தெரியும் தாயே!
செம்பியன் மாதேவி பெருமூச்சு விட்டு,
ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், இரத்தப்பாசம் உள்ளவர்கள் ஒரு -வரையொருவர் சந்தேகிக்கும்படி ஆகிவிட்டது. (என்று வருத்தப்படுகிறார்)



திருமலை! ஆதித்த கரிகாலன் ஒரு காலத்தில் என்னிடம், தன் சொந்த தாயை காட்டிலும் நூறு மடங்கு அன்பும், மரியாதையும் கொண்டிருந்தான். அவன்கூட என் பேரில் ஐயுறும்படி ஆகி விட்டதே...
என் நாயகனுடன் சேர்ந்து நானும் இந்த மண்ணுலகை விட்டு போயிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்..... இங்கே செய்ய வேண்டிய பணிகளை என்னிடம் கொடுத்து விட்டல்லவா சென்று விட்டார்! என்ன துர்பாக்கியசாலி நான்!
அம்மா! தங்கள் பதி முக்காலமும் உணர்ந்த மகான்! தங்களை இங்கு இருக்கும்படி அவர் சொல்லிவிட்டு போனது இந்த நாடு செய்த பாக்கியம்.
நூறு ஆண்டுகளாக பல்கி பெருகிவரும் இந்த சோழப் பேரரசு, சகோதரச் சண்டையால் நாசமாகாமல் காப்பாற்றும் பொறுப்பு தங்களை சார்ந்தது. தங்களால் மட்டுமே அது முடியக் கூடியது.



எனக்கு அப்படி தோன்றவில்லை திருமலை... என் சொந்த மகனே நான் சொல்வதை கேட்காமல் போன பிறகு மற்றவர்களை நான் எப்படி கட்டுப்படுத்த முடியும்?
திருமலை! ஒற்றர்களை பற்றி சொன்னாயே, ஆதித்த கரிகாலன்தான் ஒற்றர்களை அனுப்பியிருப்பான் என்று நீ கருதுகிறாயா? என்மீது அவனுக்கு அவ்வளவு அவநம்பிக்கை வந்துவிட்டதா?
ஆம் தாயே! காஞ்சிபுரத்தில் ஒரு கோவில் மண்டபத்தில் அமர்ந்து அவர்கள் பேசியதை நான் ஒற்றுகேட்டேன்!
அவர்கள் என்றால் யார்?



இளவரசர் ஆதித்த கரிகாலர், திருக்கோவலூர் மலையமான் மற்றும் பல்லவன் பார்த்திபேந்திரன். இவர்கள் மூவரும் ஆவேசமாக பேசிக் கொண்டிருந்ததை, இருளடைந்த கற்கோயிலுக்குள்ளே மறைந்திருந்து கேட்டேன்!
அந்த இரண்டு பழுவேட்டரையர்களும், மதுராந்தகனும் அரசரை சிறைப்படுத்தி வைத்துள்ளதாகவும் அதற்கு நீங்கள் துணையாக இருப்பதாகவும், மலைய-மான் ஆவேசமாக கூறினார்.
மேலும், தஞ்சை மீது படையெடுத்துச் சென்று சக்கரவர்த்தியை விடுவித்து வருவோம் என்று பார்த்திபேந்திரன் தனது யோசனையை கூறினான்.


கரிகாலன் இதற்கு என்ன மறுமொழி கூறினான்?
சண்டையின்றி அரசரை காஞ்சிக்கு அழைத்துவர, கடைசி முயற்சியாக ஒரு தூதனை தஞ்சைக்கு அனுப்பலாம் என்று இளவரசர் தீர்மானித்தார்.
அந்த தூதன் யார் என்பதையும் நான் கண்டு கொண்டேன்! அவன் சாதாரணமானவன் அல்ல, தூதன் வேலையுடன் சேர்த்து ஒற்றன் வேலையும் பார்க்கக் கூடியவன்!



அவனிடம் நான் பேச்சு கொடுத்துப் பார்த்தேன். அவன், அவனைப் பற்றி ஒன்றுமே தெரியப்படுத்தாமல் என்னிடம் இருந்து பல விஷயங்களை கிரஹிக்கப் பார்த்தான்.
நம் குடந்தை ஜோதிடரின் ஜாலமும் அவனிடம் பலிக்கவில்லை.....
பிறகு அவன் தலைநகருக்கு சென்று எப்படியோ சக்கரவர்த்தியிடம் ஓலையை கொடுத்து விட்டு, பழுவேட்டரையர்களின் ஆட்களிடம் சிக்காமல் தப்பித்தும் விட்டான்.
அப்படியென்றால் அவன் மிக சாமர்த்தியசாலிதான், சந்தேகமே இல்லை!
காஞ்சியிலிருந்து கிளம்பிய பிறகு நீ எங்கு சென்றாய்?
நேரே இங்கு வருவதற்காகப் புறப்பட்டேன். அப்போது கடம்பூர் சம்புவரையரின் மாளிகையில் ஒரு பெரிய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது எனக்கு தெரிந்தது. அதற்கு பெரிய பழுவேட்டரையரும் வந்திருந்தார். உடன் பழுவூர் இளையராணி நந்தினியின் பல்லக்கும் இருந்தது.


எல்லாம் அவளுடைய செயல்தான்! இந்தச் சோழ நாட்டுக்கு இப்போது நேர்ந்திருக்கும் ஆபத்து அவளால் ஏற்பட்டதுதான்!
திருமலை! நீ அவளை சந்திக்க வேண்டியதுதானே?
முடியவில்லை தாயே!
மேலும் ஆதங்கத்தோடு,
தாங்கள் கட்டளையின் பேரில் அந்த பெண் பாம்பை எனது உடன்பிறந்த சகோதரியாகவே பாவித்து எத்தனை வருஷம் வளர்த்து வந்தேன்,
எத்தனையோ பிரபந்தங்களையும், பாசுரங்களையும் அவளுக்கு நான் கற்பித்தேன்! அதையெல்லாம் நினைத்து பார்த்தால் என் நெஞ்சம் கொதிக்கின்றது! பழுவூர் ராணியான பிறகு அவள் என்னைப் பார்க்கக் கூட மறுக்கிறாள்..


அதைப் பற்றி வருத்தப்பட்டு என்ன பயன்? நாம் நினைப்பது ஒன்றும், நடப்பது ஒன்றும் ஆக முடிகிறது.....
சரி, கடம்பூரில் என்ன நடந்தது? அதை நீ கூறு!
நந்தினியை எப்படியாவது சந்தித்து அவளை எச்சரிக்கை செய்வது என்ற உத்தேசத்துடன் கடம்பூருக்குச் சென்றேன்.
துணிந்து மாளிகையின் மதில் சுவர் ஏறி குதித்தேன். அப்போது தான் எனக்கு அந்த அதிசயமான மர்ம இரகசியம் தெரிந்தது.


அது என்ன மர்மம்?
மன்னிக்க வேண்டும் தாயே! அதை கூறவே தயக்கமாக இருக்கிறது.
தயங்காமல் கூறு திருமலை.
பெரிய பழுவேட்டரையர், தான் போகும் இடமெல்லாம் பல்லக்கில் அழைத்துச் செல்வது, நந்தினி என்று நாம் இத்தனை காலம் நினைத்தது தவறு! அதில் இருந்தது நந்தினி அல்ல!
தங்களின் தவப்புதல்வன் மதுராந்தகன்!!
இதைக் கேட்டு செம்பியன் மாதேவி சிறிது நேரம் திகைத்து விட்டார்.



பல்லக்கில் இருந்தது மதுராந்தகன் எனும் உண்மை, செம்பியன் மாதேவிக்கு மிகுந்த மனவேதனையை அளித்தது.
கடவுளே! நான் செய்த குற்றத்திற்கு இவ்வளவு பெரிய தண்டனையா?
ஐயோ! என் மகனே! உன்னை சிவஞானச்செல்வனாக வளர்க்க முயன்றேனே... அதன் பயனா இது? சோழ பெரும்குலத்திற்கு உன்னால் இந்த அபகீர்த்தி நேர வேண்டுமா?
திருமலை! பழையாறையை விட்டு புறப்படும் முன் மறுபடியும் என்னை பார்த்துவிட்டு போ! அதற்குள் குந்தவையிடம் பேசி இந்த பெரும் விபத்தை எப்படி தடுக்கலாம் என்று யோசித்துச் சொல்கிறேன்.


தாயே! இளவரசியிடம் கூட தாங்கள் அதைப் பற்றி பேசாமல் இருப்பதுதான் நல்லது.
ஏன்? அவளைப் பற்றியும் கூட ஐயப்படுகிறாயா என்ன?
அது இயற்கைதானே அம்மா! ஆதித்த கரிகாலரின் அருமை சகோதரி அல்லவா அவர்?
அதனால் என்ன? திருமலை! சூரியன் மேற்கில் உதயமாகி கிழக்கே அஸ்தமித்தது என்று நீ சொன்னாலும் நம்புவேன். ஆனால் குந்தவையின் பேரில் குற்றம் யார் சொன்னாலும் நம்பமாட்டேன். அவள் பிறந்த அன்றைக்கு அரண்மனை மருத்துவச்சி குழந்தையை எடுத்து வந்து என் கைகளில் கொடுத்தாள். அன்று முதல் அவளை நானே வளர்த்து வந்தேன்.



என் வயிற்றில் பிறந்த மகளைக் காட்டிலும் குந்தவையை நான் சீராட்டி, பாராட்டி வளர்த்து வருகிறேன். அவளும் என்னையே பெற்ற தாயாகவும் தந்தையாகவும் எண்ணி இன்று வரை என்னிடத்தில் அன்பும் மரியாதையும் செலுத்தி வருகிறாள்.
அம்மா! நான் ஒன்று கேட்கிறேன். குடந்தை ஜோதிடர் வீட்டுக்கு சென்று வந்ததை பற்றி குந்தவை தேவி தங்களிடம் ஏதேனும் சொன்னாரா?
இல்லை, அதனால் என்ன?


ஜோதிடர் வீட்டில் வாணர் குலத்து வாலிபன் ஒருவனை பார்த்தது பற்றியும் மீண்டும் அவ்வாலிபனை அரசிலாற்றங்கரையில் சந்தித்தது பற்றியும் இளையபிராட்டி தங்களிடம் ஏதாவது சொன்னாரா?
இல்லை... இப்படி கேட்பதில் உன் கருத்து என்ன?
தங்களிடம் சொல்ல கூடாத இரகசியம் ஒன்று இளவரசி வைத்திருக்கிறார் என்பதுதான்! நான் குறிப்பிட்ட அந்த வாலிபன்தான், ஆதித்த கரிகாலரின் தூதன்! ஒற்றன் என்று சொன்னாலும் தவறாகாது...


திருமலை! அதெல்லாம் எப்படியாவது இருக்கட்டும். குந்தவை என்னிடம் ஏதேனும் ஒன்று சொல்லவில்லை என்றால், அதற்கு தக்க காரணம் இருக்கும்.
அவளிடம் சந்தேகப்படுவதை காட்டிலும் என் பிராணனையே விட்டுவிடுவேன்!


ஐயோ! அப்படியொன்றும் நேர வேண்டாம், தாங்களுடைய நம்பிக்கையே மெய்யாகட்டும்! இளவரசி என்னிடம் ஏதோ கேட்பதற்காக வரச்சொல்லிருக்கிறார். தாங்கள் சந்திக்க விரும்புவதாக நானே அவரிடம் தெரிவித்து விடுகிறேன். (என்று கூறிவிட்டு அங்கிருந்து விடைபெற்று செல்கிறான் ஆழ்வார்க்கடியான்)
பெரியராணியை சந்தித்து விட்டோம். அடுத்து இளைய பிராட்டி குந்தவையை சந்திக்க ஆழ்வார்க்கடியானும் நாமும் செல்வோம்.


ஈசானப்பட்டரும், ஆழ்வார்க்கடியானும் செம்பியன் மாதேவியின் முன் சமய சண்டை பிடித்ததைப் பார்த்திருப்பீர்கள். உண்மையில் அவர்கள் இருவரும் உடன் பிறந்த சகோதரர்கள். இதைக் கேட்டு நீங்கள் ஆச்சரியப்படலாம்! இப்போது சைவர்களையும், வைணவர்களையும் நாம் பிரித்து பார்க்கிறோம். அக்காலத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவர் சைவத்தையும் மற்றொருவர் வைணவத்தையும் பின்பற்றி வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு ஈசானப்பட்டரும், ஆழ்வார்க்கடியானுமே சான்று.


இன்று கிருஷ்ண ஜெயந்தி என்பதால் பழையாறையில் அரண்மனையின் பின்பகுதியில் பிருந்தாவனத்து கோபிகா ஸ்திரிகளைப் போல இளவரசிகள் ஆடிப்பாடி கும்மி அடித்து மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். ஆனால், குந்தவையும் வானதியும் மட்டும் தனியே பிரிந்து ஒரு மரத்தில் ஊஞ்சல் ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.


அப்போது அங்கு அருகில் புல்லாங்குழலின் இசை கேட்கிறது. புல்லாங்குழலின் இசை கேட்டு குந்தவைக்கு கண்ணனின் ஞாபகம் வருகிறது.
நல்ல கண்ணன் இந்த செந்தமிழ் நாட்டுக்கு தெய்வமாக வந்து வாய்த்தான்! வெண்ணெய் உண்டு வேங்குழல் ஊதி பெண்களுடன் காலங்கழித்துக் கொண்டிருந்தால் மற்ற காரியங்களெல்லாம் என்ன ஆவது?
வானதி...
வானதி...


என்னடி மௌனம் சாதிக்கிறாய்? நீயும் கண்ணனின் குழலில் மயங்கி விட்டாயா, என்ன?
அக்கா! என்ன கேட்டீர்கள்?
என்ன கேட்டேனா!! உன் கவனம் எங்கே சென்றிருக்கிறது...?
எங்கும் செல்லவில்லையே? உங்களிடம்தான் இருக்கிறது.
அடி கள்ளி, ஏனடி பொய் சொல் -லுகிறாய்? உண்மையில் உன் மனம் இவ்விடத்தில் இல்லவே இல்லை! எங்கே இருக்கிறது என்று நான் சொல்லட்டுமா?
தெரிந்தால் சொல்லுங்களேன்.